**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு - குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**
**விலைமனுக்களுக்கான அழைப்பு**

# குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் வெலிசறை தடுப்பு நிலையத்திற்கு பாதுகாப்புச் சேவை வழங்குதல்

**ஒப்பந்த இல.: DIE/PRO/03/2023/58**

1. வெலிசறை தடுப்பு நிலையத்திற்கு பாதுகாப்புச் சேவை வழங்குவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் தகைமையுள்ள வழங்குனர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடைபெறும்.

3. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு இது தொடர்பான மேலதிக விபரங்களை பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுறுபாயா", 5 ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியுமென்பதுடன், விலைகூறல் ஆவணங்களை அதே முகவரியில் வைத்து 2024.01.03 ஆம் திகதி முதல் 2024.01.22 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை பரீட்சிக்க முடியும்.

   தொடர்புகளுக்கு: தொலைபேசி இல.: 011 - 2101559, தொலைநகல்: 011 - 2879091

4. மீளளிக்கப்படாத ஐயாயிரம் ரூபா (ரூ. 5,000/-) கட்டணத்தைச் செலுத்தி எழுத்துமூல விண்ணப்பமொன்றை பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுறுபாயா", 5 ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம் 2024.01.03 ஆம் திகதி முதல் 2024.01.22 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை அச்சிடப்பட்ட முழுமையான விலைகூறல் ஆவணத் தொகுதியொன்றை கொள்வனவு செய்ய முடியும்.

5. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை "Original" மற்றும் "Duplicate" என இரு பிரதிகளில் தயாரித்து 2024.01.23 ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், "சுஹுருபாயா" 5 ஆம் மாடி, "B" பகுதி, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரில் வந்து ஒப்படைக்கவோ முடியும். விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் சமூகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

6. விலைகூறுவோரினால் கையளிக்கப்படுகின்ற விலைமனுவானது விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்படும் காலப்பகுதிக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

7. எல்லா விலைமனுக்களும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் பந்தி 3.4 இல் காட்டப்பட்டுள்ளவாறு விலைமனு பிணைமுறியொன்றுடன் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பெயரில் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன், விலைமனு பிணைமுறியானது ரூ250,000/- பெறுமதியைக் கொண்ட 2024.05.06 ஆம் திகதி வரை செல்லுபடியான இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கியொன்றினால் விநியோகிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

8. விலைமனு முன் சந்திப்பொன்று 2024.01.12 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுறுபாயா", 5 ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவில் நடைபெறும்.

**தலைவர்**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**"சுஹுறுபாயா",**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**